வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 30.06.2026 செவ்வாய்க்கிழமை | இதழ் : 175 | பக்கங்கள் : 08



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்

# பிரதான சூத்திரதாரியை கண்டறியவே நீடிக்கிறது பயங்கரவாத தடைச்சட்டம்!

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தகவல்



கொழும்பு, ஜூன். 30

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டறிவதற்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தற்போதைய அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டிருப்பதாக பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் நீக்கம் குறித்த கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் வாக்குறுதியை வழங்கியே அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. தற்போதும் அந்த நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கின்றது.

விரைவில் குறித்த சட்டத்தை நீக்குவதற்கு நீதி அமைச்சு உள்ளிட்ட துறைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தை ஜனநாயகத்தை மீறும் வகையில் அரசாங்கம் செயற்படாது எனினும் நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் வகையிலும், பல உயிர் பலிகளையும் ஏற்படுத்திய

07

# பெற்றோலின் விலை 20 ரூபாவால் குறைப்பு!

### டீசல் விலையும் 25 ரூபா இறக்கம்

கொழும்பு, ஜூன். 30

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளைத் திருத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்படி 434 ரூபாயாக காணப்பட்ட 92 ரக ஒக்ரேன் பெற்றோல் 1 லீற்றரின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 414 ரூபாவாகும்.

07

# கிழக்கு விசேட காணிக்குழு தீர்மானத்தை ரத்து செய்க!

### ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

கொழும்பு, ஜூன். 30


கிழக்கு மாகாணத்தில் காணி விவகாரங்களைக் கையாள்வதற்காக விசேட குழு ஒன்றையும், பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையிலான "முழு அதிகாரம்" கொண்ட விசேட பொலிஸ் பிரிவொன்றையும் அமைப்பதற்கு கடந்த 22 ஆம் திகதி அமைச்சரவை எடுத்த தீர்மானம் தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த அமைச்சரவை தீர்மானத்தை உடனடியாக ரத்து செய்யுமாறு அல்லது

07

# யாழ்.மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு துணை ஆயர் அன்ரன் ரஞ்சித்!

### ஓய்வு பெறுகிறார் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை



யாழ்ப்பாணம், ஜூன்.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் திருத்தந்தை 14ஆம் லியோவினால்

07

# தேர்தல் செலவு சமர்ப்பிக்க தவறிய வேட்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை!

### மாவட்ட ரீதியாக அறிக்கை கோரல்

கொழும்பு, ஜூன். 30

தேர்தல்கள் செலவு தொடர்பில், உரிய காலத்துக்குள் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறிய வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் மீது மாவட்ட ரீதியாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் குறித்து, உரிய அதிகாரிகளிடம் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

07

# இன்றுடன் முடிவடையும் காலக்கெடு!

கொழும்பு, ஜூன். 30

அரச உயர் அதிகாரிகள் தமது சொத்து மற்றும் பொறுப்பு பிரகடனங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு இன்று செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைவதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த காலக்கெடுவுக்குள் பிரகடனங்களைச்

07

# தெல்லிப்பழை வைத்தியசாலையை மத்தியின் கீழ் கொண்டு செல்லாதீர்!

### ஈ.பி.டி.பியும் கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூன். 30

தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவை மாகாண அமைச்சின் ஊடாக விரிவுபடுத்தவேண்டுமே தவிர, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையையும் சேர்த்து மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரும் முயற்சிகள் கைவிடப்படவேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கள்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

07

# வவுனியா மேயரின் பதவி நீக்கம் ஆளுநருக்கு எதிராக போராட்டம்!




வவுனியா, ஜூன். 30

வவுனியா மாநகரசபை மேயரின் உறுப்புரிமை நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கம் முன்பாக ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம், மன்னார் வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று காமினி மகாவித்தியாலயம் முன்பாக நிறைவடைந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு கோசங்களை எழுப்பியிருந்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் கடந்த 24ஆம் திகதி வெளியிட்ட விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வவுனியா மாநகரசபை மேயர் எஸ்.காண்டீபனின் பதவியும், மாநகர சபை உறுப்புரிமையும் நீக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில், "ஆளுநரே ஜனநாயக

07

# 2026ஆம் ஆண்டில் நாட்டில் அரச வருமானம் குறையும்!

### நிதி அமைச்சு தகவல்

கொழும்பு, ஜூன். 30

2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டில் இலங்கையின் ஒட்டுமொத்த அரச வருமானம் குறையும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

2027ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட நிதி மூலோபாய அறிக்கையின்படி, மானியங்கள் உள்ளடங்கலான ஒட்டுமொத்த அரச வருமானம் 2025ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.7 வீதமாகக் காணப்பட்டதுடன், அது 2026ஆம்

07

# நாவற்குழியில் இரவுவேளை வன்முறைக் குழு அட்டகாசம்!

### அடித்து நொருக்கப்பட்டது வீடு!!

யாழ்ப்பாணம், ஜூன். 30

நாவற்குழி பகுதியில் வீடு ஒன்று வன்முறைக் குழுவினரால் அடித்துச் சேதப்படுத்தப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மீற்றர் வட்டிக்கு பணத்தைப் பெற்றுவிட்டு அதனை அடைப்பதற்கு வாங்கிய பணத்தின் பல மடங்கு பணம் செலுத்தப்பட்டும் கடன் தீரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

07

# பல்கலை முறையில் நிலவும் சவால்கள் ஜூலை 2 இல் விசேட கலந்துரையாடல்!

கொழும்பு, ஜூன். 30

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் நிலவும் சவால்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் தற்போது ள்ள பிரச்னைகளை இனங்கண்டு, அவற்றுக்கான

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகீத் காணாமலாக்கப்பட்டு 6,000 நாட்கள் கடந்துவிட்டன!



## நீதிக்கான போராட்டம் தொடரும் என்கிறார் சந்தியா எக்னலிகொட

கொழும்பு, ஜூன்.30

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டு 6,000 நாள்கள் நிறைவடைகின்ற நிலையில், அவரை நினைவு கூர்ந்து அவரது மனைவி சந்தியா எக்னலிகொட உணர்வுபூர்வமான விடயமொன்றை பகிர்ந்துள்ளார்.

பிரகீத் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டு இன்றுடன் 6,000 நாள்கள் ஆகின்றன. நாங்கள் நீதியைத் தேடிப் பயணிக்கத் தொடங்கி இன்றுடன் 6,000 நாள்கள் நிறைவடைகின்றன. இந்த மண்ணில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்கள் என அனைத்து மனிதர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். தங்களுக்குப் பிரியமானவர்களை இழந்த எந்தவொரு மனிதனுக்கும் இருக்கக்கூடிய ஒரே ஆறுதல் நீதி மட்டும்தான்.

நினைவு என்பது ஒருபுறம் நம்மை காயப்படுத்துகிறது. மறுபுறம் நமக்கு உந்துதலைத் தருகிறது; மற்றொரு புறம் நீதியின் ஒளியைத் தேடி பயணிப்பதற்கான சக்தியை நமக்கு அளிக்கிறது. இந்த நீண்ட நெடிய போராட்டப் பயணத்தில் தமக்குத் துணையாக நின்றவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

எனக்கு முதன்முதலில் அறிமுகமான சட்டத்தரணி கிரிஸ்மால் வர்ணசூரிய, சுனில் வட்டகல மற்றும் இன்றுவரை தன்னுடனே பயணிக்கும் சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும ஆகியோரின் பங்களிப்புக்கு நன்றி. அதேபோல, பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியேயும் பிரகீத்திற்காகத் தொடர்ந்து குரல்கொடுத்து, தங்களைப் பாதுகாத்த அனைத்து அரசியல் தலைவர்களுக்கும், ஏனையோருக்கும் எனது மரியாதையை சமர்ப்பிக்கிறேன். இந்த விவகாரத்தில் பங்களிப்பு செய்த நீதிபதிகளுக்கு நன்றி. எதிர்காலத்தில் எனக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்னும் நீதிமன்றங்களின் மீதே இருக்கிறது. எங்களது பணிகளை மக்களிடம் கொண்டு சேர்த்த ஊடக நிறுவனங்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், தமக்குத் தஞ்சம் அளித்துப் பாதுகாத்த இந்நாட்டு மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.- என குறிப்பிட்டுள்ளார். (அ)

# ரூபா 12 இலட்சம் வாகனம் என்ற வாக்குறுதி எங்கே?

## அரசை சாடிய சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜூன். 30

தேர்தல் காலத்தில் 12 இலட்சம் ரூபாவுக்கு ரொயோட்டா விற்ஸ் ரக காரொன்றை பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதி வழங்கி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று அரச ஊழியர்களுக்கு சம்பளத்தில் கழிக்கப்படும் முறையில் 20 கிலோ அரிசியை பெற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம்சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 102ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு திஸ்ஸமஹாராம யோதகண்டிய போதிமஹா விகாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

தேர்தல் காலங்களில் நாடு அபிவிருத்தியின் சொர்க்கபுரியாக மாற்றப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் அவை நிறைவேற்றப்படாமல் "பொய்களின் சொர்க்கபுரியாக" மாறிவிடுகின்றது என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரச ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் இளைஞர்கள் 12 இலட்சம் ரூபா விலையில் வாகனம் பெறலாம் என்ற எதிர்பார்ப்பில் இருந்ததாகவும், ஆனால் இன்று அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கே சிரமப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவர் அரசாங்கத்தை விமர்சித்தார். விவசாயிகள் தங்க நகைகளை அடகு வைத்து, கடன் பெற்று விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும், தரமான உரம், உர மானியம் மற்றும் விவசாய உள்ளீடுகள் உரிய முறையில் கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டினார். (அ)

# கடல் வான்வழிப் போதைப்பொருள் கடத்தலை தடுக்க தீவிர நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 30

நாட்டின் இளைய தலைமுறையினரையும், சிறுவர்களையும் குறிவைத்து மேற்கொள்ளப்படும் உள்நாட்டு மற்றும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை முற்றாக ஒழிக்கும் நோக்கில், அரசாங்கம் விசேட தேசிய வேலைத்திட்டத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நாடே ஒன்றாக தேசிய திட்டத்தின் கீழ், கடல் மற்றும் வான் வழி போதைப்பொருள் கடத்தல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்படவுள்ளன என்று போதைப்பொருள் பிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோக தர்மசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட கலந்துரையாலில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டின் மிக முக்கியமான சொத்துக்களான இளைய தலைமுறையினரையும், சிறுவர்களையும் குறிவைத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் திட்டமிட்டு நடத்தப்படும் போதைப்பொருள் கடத்தலை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதற்காக விசேட தேசிய வேலைத்திட்டம் ஒன்று தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கை ஜனாதிபதியின் தலைமையில், ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள நாடே ஒன்றாக என்ற தேசிய இயக்கம் தொடங்கப்பட்டு தற்போது 7 மாதங்களுக்கும் மேலாகிறது. இக்காலப்பகுதியில் இலங்கை பொலிஸ்துறை, போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, முப்படைகள், புலனாய்வுத்துறையினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஒன்றிணைந்து நாடு தழுவிய ரீதியில் பல பாரிய சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

நாட்டிற்குள் பெரும்பாலான போதைப்பொருட்கள் கடல் வழியாவே கடத்தி வரப்படுகின்றன. இதற்கு அடுத்தபடியாக வான்வழியாகவும் போதைப் பொருள்கள் கொண்டு வரப்படுவது அதிகரித்துள்ளது. கடல் மார்க்கமாக நடைபெறும் இந்த சட்டவிரோத கடத்தல்களைத் தடுப்பதற்காகப் புலனாய்வுப் பிரிவினர், கடற்படையினர் மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தினர் இணைந்து கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு, பெருமளவிலான போதைப்பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்-என்றார். (அ)

# தற்போதைய ஆட்சியின் முறைகேடுகளும் முழுமையாக விசாரிக்கப்படவேண்டும்!

## ராஜித சேனாரத்ன வலியுறுத்தல்



கொழும்பு, ஜூன். 30

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஜனாதிபதியின் அண்மைய பாராளுமன்ற உரையை வரவேற்றுள்ளதுடன், கடந்த கால ஊழல் குற்றச்சாட்டுகள் மட்டுமன்றி தற்போதைய ஆட்சியில் இடம்பெறுவதாகக் கூறப்படும் முறைகேடுகளும் முழுமையாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், அரசாங்கம் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனில் அது அனைத்து தரப்பினருக்கும் சமமாக அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கொள்கலன் விவகாரம், நிலக்கரி கொள்வனவு, அமைச்சர்களின் சொத்துக்கள் மற்றும் கிரிப்டோகரன்சி முதலீடுகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார். மேலும், அமைச்சரவை உறுப்பினர்களின் சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக வழங்கப்பட்ட வாக்குறுதி இதுவரை நடைமுறைப்படுத் தப்ப டவில்லை என விமர்சித்த அவர், தற்போதைய சூழலில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒன்றின் தேவை இல்லை எனவும் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக கருத்து தெரிவித்த ராஜித சேனாரத்ன, பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதாக அரசாங்கம் கூறினாலும், வெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்தத் தேவையான அளவிலான பொருளாதார வளர்ச்சியும் அந்நியச் செலாவணி கையிருப்பும் இன்னும் போதுமானதாக இல்லை என சுட்டிக்காட்டினார். பணவீக்கம் அதிகரித்துள்ள நிலையில் நாட்டை முழுமையான நிலையான பொருளாதார நிலைக்கு வந்துவிட்டதாக கூற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக நினைவூட்டிய அவர், சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், ஊடகவியலாளர்களான லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட, கீத் நொயார், உபாலி தென்னகோன் ஆகியோருடன் தொடர்புடைய தாக்குதல்கள் மற்றும் கொலைச் சம்பவங்களுக்கான விசாரணைகள் இன்னும் முழுமை பெறாதது குறித்து அவர் கவலை வெளியிட்டார்.

எதிர்க்கட்சியினரை கைது செய்வதை அரசியல் பழிவாங்கலுக்கான கருவியாக பயன்படுத்தக் கூடாது என வலியுறுத்திய முன்னாள் அமைச்சர், விவசாயம், பொருளாதார நெருக்கடி, முதலீட்டு பற்றாக்குறை போன்ற நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (அ)

# சர்வதேச சமையல் போட்டியில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம்!

கொழும்பு, ஜூன். 30

2026 கோடைக்கால சமையல் கலைஞர்கள் போட்டியில் இலங்கை சமையல் குழு வெள்ளிப் பதக்கத்தை வென்று, சர்வதேச சமையல் துறையில் நாட்டின் பெயரை பொறித்துள்ளது.

இந்தப் போட்டி சீனாவின் கிங்டாவோவில் ஜூன் 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் நடைபெற்றது.

சீனா, ரஷ்யா,கஸகஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் அஸர்பைஜான் போன்ற சக்திவாய்ந்த நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகள் இந்தப் போட்டியில் பங்கேற்றன.

இந்த நிகழ்வு உலகின் மிகவும் திறமையான பல சமையல் கலைஞர்களை ஒன்றிணைத்தது.

தலைமை சமையல் கலைஞர் நிஷாத் சமரநாயக்க மற்றும் உதவி சமையல் கலைஞர் மனோஜ் லியனகே ஆகியோர் சீனாவின் பீய்ஜிங்கில் அமைந்துள்ள ஒரு இலங்கை உணவகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.

இலங்கைக்கே உரித்தான பாரம்பரிய பால் சாதம் மற்றும் தேங்காய் ரொட்டி உள்ளிட்ட பல இலங்கை சமையல் குறிப்புகளை அவர்கள் வழங்கினர்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சீனாவில் நடைபெற்ற ஒரு சர்வதேச அளவிலான சமையல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்று, சமையல் துறையில் புதிய சாதனைகளைப் படைத்துள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.06.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், ஆனி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மத்திய கிழக்கில் மீண்டும் போர்

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் திடீரென்று தீவிரமடைந்திருக்கும் பழிக்குப்பழி இராணுவ மோதல்கள் ஏற்கெனவே நிலைகுலைந்திருக்கும் மத்திய கிழக்கு பிராந்தியத்தின் உறுதிப்பாட்டுக்கும் கடல்சார் பாதுகாப்புக்கும் மேலும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

இரு தரப்புகளுக்கும் இடையிலான அடிப்படை மூலோபாய முரண்பாடுகள் " இஸ்லாமாபாத் புரிந்துணர்வு உடன்படிக்கையை விரைவாகவே முறிவடையச் செய்துவிட்டன.

இரு வாரங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை மீறியதாக இரு தரப்புகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டினாலும், இந்த மோதல்களின் மையப்புள்ளி உலகின் மொத்த மசகு எண்ணெய்ப் போக்குவரத்தில் சுமார் 20 சதவீதத்தைக் கையாளும் முக்கியமான கடல்சார் பாதையான ஹோர்முஸ் நீரிணையேயாகும்.

ஓமான் நாட்டின் கடற்கரையை ஒட்டிய தெற்கு கடல்வழி ஒன்றை பிரத்தியேகமாக உருவாக்குவதன் மூலமாக முழுமையான - தடைகளற்ற சர்வதேச கப்பல் போக்குவரத்தை உறுதிசெய்யுமாறு அமெரிக்கா வலியுறுத்துகிறது.

சில எண்ணெய்க் கப்பல்கள் மீது ஈரான் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதல்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள கடல்சார் சுதந்திரம் தொடர்பான விதியை நேரடியாக மீறிய செயல் என்று குற்றஞ்சாட்டிய அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல்களை நடத்தத் தொடங்கியது.

ஹோர்முஸ் நீரிணையின் வடக்கு பாதைகளின் மீது தனக்கிருக்கும் இறையாண்மையையும் கண்காணிப்பு உரிமையையும் ஈரான் உறதியாகக் கோருகிறது. தனியான கப்பல் போக்குவரத்து வழிகளை உருவாக்க முயற்சிப்பதன் மூலம் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டமைப்பு நடைமுறைகளை அமெரிக்கா மீறுகிறது என்பது ஈரானின் குற்றச்சாட்டாக இருக்கிறது.

இதன் காரணமாக, கப்பல்களை தடுப்பதன் மூலமாக ஈரான் அதன் அதிகாரத்தை நிலைநிறுத்த முற்படுவதோடு குவைத்திலும் பஹ்ரெயினிலும் அமெரிக்கத் தளங்கள் மீது பழிக்குப்பழி தாக்குதல்களையும் நடத்திவருகிறது.

ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதையும் அதன் அணுவாற்றலை ஒழிப்பதையும் பிரதான நோக்கமாகக் கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்த போர் தற்போது சரியாக நான்கு மாதங்களுக்கு பிறகு ஹோர்முஸ் நீரிணையில் ஆதிக்கம் செலுத்துவதற்கான போராக மாறியிருப்பதைக் காண்கிறோம்.

இராணுவ ரீதியாக "வேலையை முடிப்பதற்கு" அமெரிக்காவை ஈரான் நிர்ப்பந்தித்தால், அதற்குப் பிறகு ஈரான் என்ற நாடே இருக்காது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் செய்திருக்கும் அச்சுறுத்தல் அதிகபட்ச நெருக்குதலைக் கொடுத்து ஈரானைப் பணியவைக்கும் அவரது கொள்கையின் உச்சக்கட்ட வடிவத்தை பிரதிபலிக்கிறது.

போரின்போது ஒரு கட்டத்தில் ஈரானிய நாகரிகத்தையே (அது இனவழிப்புத்தான்) இரவோடிரவாக அழித்து விடப்போவதாக ட்ரம்ப் ஒரு தடவை அச்சுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் மூண்டிருக்கும் போருக்கு மத்தியில் ஈரானின் நிலைப்பாடு முன்னரை விடவும் இறுக்கமடைந்திருக்கிறது. அமெரிக்காவுடன் இனிமேல் பேசப் போவதில்லை என்று அந்த நாடு அறிவித்திருக்கிறது.

தற்போது கட்டவிழும் அபாயகரமான நிலைவரங்களினால் உலகில் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரே பேர்வழி இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு மாத்திரமே.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் பதற்றம் தணிந்து எண்ணெய்க் கப்பல்களின் போக்குவரத்து சீராகும் என்றும் பொருளாதார இடர்பாடுகள் தணியும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்த்த உலக நாடுகளையும் மக்களையும் புதிதாக மூண்டிருக்கும் மோதல்கள் பெரும் ஏமாற்றத்துக்கும் விரக்திக்கும் உள்ளாக்கியிருக்கின்றன.

# பிரெக்ஸிட்டுக்கு பின்னரான பிரிட்டன்

## தேசியவாதத்தால் நஞ்சூட்டப்பட்ட அரசியல்



பிரெக்ஸிட் பொதுவாக்கெடுப்புப் போராட்டத்தின் உண்மையான தொடர்ச்சி என்பது, பிரிட்டனுக்கும் ஐரோப்பிய ஒன்றியத் திற்கும் இடையிலான உறவைப் பற்றியது அல்ல மாறாக, வெறுப் பாலும் இனப் பிரிவி னையாலும் தேசபக்தியை வரையறுக்கும் ஒரு கருத்தியல் இயக்கத்திடமிருந்து, உண்மையான தேசபக்தியை மீட்டெடுப்ப தற்கான போராட்டம் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

...

பிரெக்ஸிட் பிரச்சாரத்தின் போது மறைமுகமாக இருந்த இனவெறி, இப்போது வெளிப்படையாகத் தெரிகிறது. றிஃபார்ம் யுகே (Reform UK) கட்சியின் வீட்டுவசதிக் கொள்கையானது அமைப்பில் உள்ள "வெள்ளையினத்தவருக்கு எதிரான" பாகுபாட்டை மாற்றுவதாக வாக்குறுதி அளிக்கிறது; இலட்சக்கணக்கான மக்களின் குடியேற்ற உரிமைகளை ரத்து செய்து, அவர்களை வீடுகளில் இருந்து வெளியேற்றி, நாடுகடத்துவதற்கு வழிவகை செய்கிறது. இது இனச் சுத்திகரிப்பு (Ethnic Cleansing) மூலம் சமூக வீட்டுவசதிகளை உருவாக்குவதற்கான ஒரு வரைபடமாகும்.

இந்தத் தீவிரவாதத்தைக் கையாள்வதில் ஸ்டார்மருக்கு இருந்த இயலாமை தான் அவரது மரபின் மிகவும் வருத்தத்திற்குரிய பகுதியாக இருக்கும். எதிர்க்கட்சியாக இருந்த போது, பிரெக்ஸிட்டின் நியாயத்தை கேள்வி கேட்பதே ஒரு விலக்கப்பட்ட விடயமாக அவர் நினைத்தார். தொழிலாளர் கட்சியின் முன்னாள் கோட்டைகளில் இருந்த வாக்காளர்கள் கலாச்சாரப் போரினால் பிரெக்ஸிட் ஆதரவாளர்களாக மாறியிருந்ததால், அவர்களோடு அதே பாணியில் தான் பேச வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

ஆட்சியில் அமர்ந்தபோதும், அந்த அனுமானம் உள்துறை அமைச்சகத்தில் ஃபாராஜிசத்தின் (Faragism) ஊடுருவலுக்கு வழிவகுத்தது. றிஃபார்ம் யு.கே. கட்சியிடம் இருந்து வாக்காளர்களைக் கவர்வதற்காக, அதன் தலைவரின் வாதங்களையே தானும் எதிரொலித்து, அதற்கு அங்கீகாரம் வழங்கும் அதே தோல்வியடைந்த கன்சர்வேடிவ் கட்சியின் உத்தியையே பிரதமரும் பின்பற்றினார்.

தீவிர வலதுசாரிப் பேச்சுக்கள் சாதாரணமாக்கப்படுவதை எதிர்த்து ஸ்டார்மர் எதுவுமே செய்யவில்லை என்று சொல்வது நியாயமாக இருக்காது.

ஆனால், எப்போதும் போல, அவர் தவறான பாதையை முதலில் தேர்ந்தெடுத்து, பின்னரே சரியான பாதையைக் கண்டறிந்தார். பிரிட்டன் "அந்நியர்களின் தீவாக" (Island of strangers) மாறும் அபாயம் உள்ளது என்று ஈனக் பவல் (Enoch Powell) பாணியில் எச்சரித்து, தனது சொந்தக் கட்சியிலேயே கோபத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்திய பிறகே, அவர் தனது தொனியை மாற்றினார்.

கடந்த ஆண்டு தொழிலாளர் கட்சி மாநாட்டில் அவர் ஆற்றிய உரை இந்தத் தவறைத் திருத்தும் நோக்கம் கொண்டதாக இருந்தது. தேசபக்தி என்பது "தன்னலத்தைக் கடந்து சேவை செய்வது் அது அன்பிலும் பெருமையிலும் வேரூன்றியது" என்று அவர் பேசினார். பரஸ்பரப் புரிதலை சிதைப்பதன் மூலம் வெறுப்பைத் தூண்டி, அதன் மூலம் தனது அரசியல் இலட்சியத்தை அடையும் ஃபாராஜின் எதிர்மறை அரசியலோடு இதை அவர் ஒப்பிட்டார்.

ஆனால் ஸ்டார்மரின் குரல் அந்த மாநாட்டு அரங்கைத் தாண்டி ஒலிக்கவில்லை, அதை மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஆற்றலும் அவரிடம் இல்லை. அந்த வகையில், அவருக்குப் பின்னால் வரக்கூடியவராகக் கருதப்படும் ஆண்டி பர்ன்ஹாம் , கதைகளை இன்னும் இயல்பாகச் சொல்லும் திறனைக் கொண்டுள்ளார். நிச்சயமாக, அரசியல் அமைப்பில் ஓடிக்கொண்டிருக்கும் இந்தத் தேசியவாத நஞ்சை அகற்றுவதற்கு வெறும் கதை சொல்லும் திறன் மட்டும் போதாது. தவறான கொள்கை வடிவமைப்பில் இருந்துதான் தகவல் தொடர்புத் தோல்விகள் தொடங்குகின்றன. நம்பகத்தன்மை என்பது நோக்கத்தின் தெளிவிலிருந்து பிறக்கிறது.

ஒரு விடயம் எதற்காகப் பயன்படுகிறது என்றே உங்களுக்குத் தெரியாதபோது, அதை உங்களால் உண்மையான ஈடுபாட்டுடன் விற்க முடியாது. பர்ன்ஹாம் கூட இதில் தவறு செய்யக்கூடும். ஆனால், தான் யாருக்கு எதிராக நிற்கிறோம் என்பதில் அவர் தெளிவாக இருப்பது அவருக்குப் பலம் சேர்க்கிறது. பிரதமர் பதவிக்கான போட்டியில் இறங்குவதற்குக் கிடைத்த அவரது பாராளுமன்ற அங்கீகாரமும், அவரது சிறு - வெற்றியும் மேக்கர்ஃபீல்டில் (Makerfield) றிஃபார்ம் யு.கே. கட்சியுடன் போராடிப் பெற்றதுதான். பிரெக்ஸிட்டைத்

தள்ளிவைத்துவிட்டு ஆட்சி செய்ய முடியும் என்று ஸ்டார்மர் நினைத்தார். அதை தேசிய அடையாளங்களுக்கிடையிலான ஒரு போட்டியாக அவர் பார்க்கவில்லை.

பிரெக்ஸிட் பொதுவாக்கெடுப்புப் போராட்டத்தின் உண்மையான தொடர்ச்சி என்பது, பிரிட்டனுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான உறவைப் பற்றியது அல்ல மாறாக, வெறுப்பாலும் இனப் பிரிவினையாலும் தேசபக்தியை வரையறுக்கும் ஒரு கருத்தியல் இயக்கத்திடமிருந்து, உண்மையான தேசபக்தியை மீட்டெடுப்பதற்கான போராட்டம் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

தங்களின் நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் நாடுகடத்த விரும்பாத பெரும்பாலான மக்கள் வாழும் இந்த நாட்டில், பர்ன்ஹாமால் இந்தப் போரை வெல்ல முடியும். அவர் பிரெக்ஸிட்டின் சாபத்தை முறியடித்து, டவுனிங் வீதியில் நீடித்து நிலைத்து ஏதேனும் சாதிக்க விரும்பினால், அவர் இந்தப் போரை வென்றே தீர வேண்டும்.

**(ராஃபேல் பெஹ்ர், தி கார்டியன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 30 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம் - ஆனி 16
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பிரதமை




**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**இடபம்**
சந்திராஷ்டம இருப்பதால் தெளிவான முடிவுகளை எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் ரகசியங்களை சொல்லி கொள்ள வேண்டாம். எச்சரிக்கை தேவைப்படும்.

**மிதுனம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் பிள்ளைகளால் மதிப்பு கூடும். கல்யாண பேச்சி சாதகமாக முடியும். உத்தியோகத்தில் வழிய வந்து பேசுவார்கள். தன்னம்பிகை துளிர்விடும்.

**கடகம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். தொட்டது தூலங்கும் நாள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்பு தொல்லை குறையும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குங்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும்.

**கன்னி**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளி போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
கணவன் மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். முன்கோபம் குறையும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்று கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மனசாட்சிப்படி செயல்பட வேண்டும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் நான்கு ஐந்து வேலைகளை இழுத்து போட்டு பார்க்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் மற்றவர்களின் குறைகளில் கவனம் செலுத்த வேண்டாம்.

**மகரம்**
இன்றைய தினம் வேலைச்சுமையால் நீங்கள் சோர்வு அடைவீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**கும்பம்**
புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டிய நாள்.

**மீனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். எண்ணாங்கள் நிறைவேறும் நாள்.

# நெடுந்தீவு, அனலைதீவு வைத்தியசாலைகளை நேரில் பார்வையிட்ட சுகாதார அமைச்சர் நளிந்த

யாழ்ப்பாணம், ஜூன். 30

வடமாகாண வைத்தியசாலைகளினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ வட மாகாண யாழ் தீவகற்ப பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலைகளைக் கண்காணிக்கும் நோக்கில் விசேட விஜயம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

அதற்கமைய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய யாழ்ப்பாணம் தீவகற்பம் பகுதியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அவர் விசேட கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளின் தற்போதைய நிலையை நேரடியாக மதிப்பீடு செய்தல், அங்கு நிலவும் சவால்களைக் கண்டறிந்து அவற்றுக்கான உடனடி மற்றும் நீண்டகால தீர்வுகளைத் திட்டமிடுவதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதன்போது இரு வைத்தியசாலைகளினதும் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பிரதேச மக்களுடனும் அமைச்சர் கலந்துரையாடினார்.

மருந்து விநியோகம், மருத்துவ உபகரணங்கள், மனித வளம், அவசர நோயாளி போக்குவரத்து வசதிகள், தாய்-சேய் சுகாதார சேவைகள் மற்றும் தொற்று நோய்கள், தொற்றா நோய் கட்டுப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

கடல் போக்குவரத்தைச் சார்ந்து வாழும் யாழ்ப்பாணம் தீவகற்பம் பகுதியில் உள்ள மக்களுக்கும் ஏனையவர்களைப் போன்றே தரமான சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சுகாதார சேவை என்பது எல்லைகளுக்கு அப்பாற்பட்ட அடிப்படை உரிமையாகும். ஆகையால் இந்த வைத்தியசாலைகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்களை மேம்படுத்த அவசர நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்பரை விடுத்திருந்தார். (அ)

# விவாதச் சமரில் யாழ். இந்துவை தோற்கடித்து வட்டு. இந்துக் கல்லூரி தேசியத்துக்கு தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன். 30

மாகாண மட்ட விவா தப் போட்டியில் வெற்றி பெற்று முதல் நிலையை அடைந்த வட்டு இந்துக் கல்லூரி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் இடம்பெற்ற மாகாண மட்ட அறிவிப்பாளர் போட்டியில் வட்டு இந்துக் கல்லூரி மாணவி அருந்தவன் சரணியா முதல் நிலையை அடைந்து தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற மாகாண மட்ட விவாதப் போட் டியானது யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. பல சுற்றுப் போட்டிகள் நடைபெற்ற நிலையில் இறுதிப் போட்டிக்கு வட்டு இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி தெரிவாகியிருந்தன.



பரபரப்பான வாதப் பிரதி வாதங்கள் இடம் பெற்ற நிலையில் வட்டு இந்துக் கல்லூரி விவாத அணி யாழ். இந்துக் கல்லூரி விவாத அணியை தோற்கடித்து தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

வட்டு இந்துக் கல்லூரி விவாத அணி சார்பில் சந்திரமோகன் ஷைந்தவி, அருந்தவன் சரணியா, றுஜிதா ஆனந்தராசா ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவ விசேட வைத்திய நிபுணர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன். 30

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த இரு தசாப்தங்களாக சிறுவர் மருத்துவ விசேட வைத்திய நிபுணராக பணியாற்றிய வைத்தியர் அருள்மொழி கொழும்பு லேடி றிட்ஜ்வே வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று தனது புதிய பொறுப்பை ஏற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வைத்தியர் அருள்மொழிக்கான பிரியாவிடை நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியர் அருள்மொழியின் சேவையை பாராட்டி, யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவிக்கையில்-

யாழ்.மருத்துவ பீடத்தில் மருத்துவக் கல்வியைப் பயின்ற டாக்டர் அருள்மொழி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதுநிலை மருத்துவ நிறுவனத்தில் சிறுவர் மருத்துவத்தில் விசேட பயிற்சியை நிறைவு செய்து, தனது சொந்த மண்ணான யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி சிறுவர் மருத்துவ சேவையின் வளர்ச்சிக்காக அளப்பரிய சேவையாற்றினார்.

குறிப்பாக, போர் சூழ்நிலை நிலவிய, மிகவும் சவாலான காலகட்டத்தில், வளங்களும் மனிதவளமும் குறைவாக இருந்த நிலையிலும், யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவ சேவையை விரிவுபடுத்தவும், அதன் தரத்தை உயர்த்தவும், புதிய சேவைகளை அறிமுகப்படுத்தவும், மருத்துவக் கல்வியை வலுப்படுத்தவும் அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினார்.

நோயாளி பராமரிப்பில் மட்டுமன்றி, சேவைத் திட்டமிடல், பிரிவு மேம்பாடு மற்றும் மருத்துவக் கல்வி ஆகிய துறைகளிலும் அவரது அர்ப்பணிப்பு பெரிதும் பாராட்டத்தக்கது.

மருத்துவ மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள் மற்றும் முதுநிலைப் பயிற்சி பெறும் இளம் சிறுவர் மருத்துவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்து, பல திறமையான சிறுவர் மருத்துவ விசேட வைத்திய நிபுணர்களை உருவாக்குவதிலும் அவர் முக்கிய பங்காற்றியுள்ளார்.

அவரது அறிவு, அனுபவம், ஒழுக்கம் மற்றும் மனிதநேய அணுகுமுறை பல தலைமுறை மருத்துவர்களுக்கு ஊக்கமளித்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவ சேவை வட மாகாணத்தின் முக்கியமான மூன்றாம் நிலை மருத்துவ சேவையாக திகழ்கிறது. தற்போது நான்கு சிறுவர் மருத்துவ விடுதிகளில் ஐந்து சிறுவர் மருத்துவ விசேட வைத்திய நிபுணர்கள் பணியாற்றுகின்றனர்.

அதனுடன், புதிதாக பிறந்த சிசுக்களுக்கான தீவிர சிகிச்சை மற்றும் பராமரிப்பிற்காக இரு சிசு மருத்துவ விசேட வைத்திய நிபுணர்களும் சேவையாற்றுகின்றனர்.

மேலும், ஐந்து சிறுவர் மருத்துவ பிரிவுகளில் ஒன்றாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சிறுவர் மருத்துவப் பேராசிரியர் பிரிவும் பேராசிரியர் மற்றும் அவரது குழுவினரின் தலைமையில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் நோயாளர் பராமரிப்பு பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகிறது. மருத்துவ மாணவர்களுக்கும் முதுநிலைப் பயிற்சி மருத்துவர்களுக்கும் உயர்தரக் கல்வியை வழங்குவதில் இப்பிரிவு முக்கிய பங்காற்றி வருகிறது.

எதிர்காலத்தில் இணுவிலில் நிறுவப்படவுள்ள சிறுவர் வைத்தியசாலைக்கான காணியைப் பெற்றுத் தருவதிலும், யாழ். போதனா வைத்தியசாலையில் சிமுலேஷன் பயிற்சி மையம் உருவாக்கப்படுவதிலும் டாக்டர் அருள்மொழி அளித்த அர்ப்பணிப்பும் முக்கியமான பங்களிப்பும் என்றும் நினைவுகூரத்தக்கதாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுவர்களைத் தொழிலாளர்களாக அமர்த்துவோருக்கு கடும் தண்டனை

## புதிய சட்டத் திருத்தத்திற்கு முன்மொழிவு

கொழும்பு, ஜூன். 30

சிறுவர்களை தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்துபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனையை கடுமையாக்க, பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கான வேலைவாய்ப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

அதன்படி தற்போதைய அபராதத் தொகையான பத்தாயிரம் ரூபாயை, ஒரு இலட்சமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

அபராதத்துடன் சேர்த்து, 12 மாதங்கள் வரை சிறைத் தண்டனை வழங்கவும் இந்த சட்டமூலம் வழிவகை செய்கிறது.

அதேநேரம், குற்றம் நிரூபிக்கப்படும் நபர்களுக்கு நீதிமன்றம் அபராதம், சிறைத் தண்டனை அல்லது இவை இரண்டையும் சேர்த்து விதிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது. (அ)

# 21 வயதுக்கு உட்பட்ட 7300 இளையோர் கைது!

கொழும்பு, ஜூன். 30

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் முழு "நாடு ஒன்றாக" என்ற விசேட போதைப்பொருள் ஒழிப்பு அதிரடிச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் கீழ், 21 வயதிற்குட்பட்ட 7300 இளைஞர்கள் இதுவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோக தர்மசேன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள இளம் வயதுச் சந்தேக நபர்களில் சுமார் 150 இளம் பெண்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேசிய போதைப்பொருள் ஒழிப்பு மகா நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தற்போதைய நிலவரம் வரை நாடு முழுவதும் மொத்தம் 214,000 இற்கும் அதிகமான சந்தேக நபர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் உத்தியோகபூர்வமாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டில் போதைப்பொருள் விநியோக வலையமைப்பை முற்றாகத் துண்டித்தல், சட்டவிரோதப் போதைப்பொருட்களுக்கான கேள்வி மற்றும் நுகர்வைக் குறைத்தல் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களைச் சீரிய முறையில் புனர்வாழ்வளித்தல் ஆகிய பிரதான மனிதாபிமான நோக்கங்களின் அடிப்படையிலேயே இந்தத் தேசிய வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# மத்தள சர்வதேச விமான நிலையத்தை வணிக ரீதியாக பயன்படுத்துவதே இலக்கு!

## பிரதி அமைச்சர் ருவான் கொடித்துவக்கு



கொழும்பு, ஜூன். 30

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை கூட்டுப் பங்குரிமையின் கீழ் இலாபகரமாக இயக்குவதற்காக அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய விருப்பம் தெரிவித்தல் செயன்முறையின் கீழ், 35 முதல் 40 வரையான சர்வதேசத் தரப்பினர் தங்களின் உத்தியோகபூர்வ ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ஜனித்த ருவான் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட முந்தைய ஏல முறைகளுடன் ஒப்பிடுகையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் முதலீட்டாளர்களின் பங்களிப்பு பாரியளவில் அதிகரித்துள்ளதாக அவர் விடுத்த உத்தியோகபூர்வ அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் வெறும் ஒன்று அல்லது இரண்டு நிறுவனங்கள் மாத்திரமே ஆர்வம் காட்டியிருந்த பின்னணியில், அண்மைய மாதங்களில் நடத்தப்பட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல்களில் நாற்பதுக்கும் மேற்பட்ட சர்வதேச நிறுவனங்கள் பங்கேற்றுள்ள போதிலும், உத்தியோகபூர்வ விண்ணப்ப முடிவுத் திகதி நிறைவடைந்த பின்னரே இறுதி விவரங்கள் உறுதி செய்யப்படும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்கட்டமைப்புகள் சிதைவடைந்து, காட்டு யானைகளின் நடமாட்டம் காரணமாக வான்வழிச் செயல்பாடுகளைப் பாதுகாப்பற்றதாக மாற்றியிருந்த மத்தள விமான நிலையம், கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் அரசாங்கத்தினால் முழுமையாக மறுசீரமைக்கப்பட்டு, வனவிலங்கு ஆபத்துகள் அற்ற ஒரு முழுமையான சர்வதேச விமான நிலையமாகத் தற்போது உத்தியோகபூர்வமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சுமார் மூன்று பில்லியன் ரூபாய் நட்டத்தை எதிர்நோக்கி வந்த இந்த வான்வழி மையத்தை, வணிக ரீதியாகப் பலப்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும் எனப் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# ஊழலை அம்பலப்படுத்தும் நபர்களை பாதுகாக்க ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 30

நாட்டில் பாரியளவிலான இலஞ்சம் மற்றும் ஊழலை அம்பலப்படுத்தும் நபர்களை பாதுகாக்க இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசியல்வாதிகள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிய கூட்டாளிகள் மற்றும் உயர் அரச பதவிகளில் உள்ளவர்கள் உள்ளிட்ட பல்வேறு குழுக்களின் கோடிக்கணக்கான ரூபாய் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இலஞ்ச வழக்குகள் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்தும் நபர்களை பாதுகாக்கவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

"அரசியல்வாதிகள் உட்பட சில குழுக்களால் பெரிய அளவிலான ஊழல் மற்றும் மோசடிகள் செய்யப்படுவதாக சமூக மட்டத்தில் விவாதங்கள் கிளம்பியுள்ளன.

இருப்பினும், தனிநபர்கள் அது குறித்து முறைப்பாடு செய்ய பயப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்துபவர்கள் மற்றும் சாட்சியமளிப்பவர்களைப் பாதுகாக்க ஆணையகம் ஏற்கனவே தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று ஆணையகத்தின் மூத்த விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் சாட்சி ஒருவர் இருந்தால், அவர் நாட்டிற்கு திரும்பும்போது தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் குறித்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# நீதிபதிகளின் ஓய்வு வயது அதிகரிப்பு; லோ ஆசியா அமைப்பு கடும் கண்டனம்

கொழும்பு, ஜூன். 30

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் நோக்கில், உரிய மக்கள் கலந்தாலோசனைகளின்றி தன்னிச்சையாக அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வதற்குக் கொண்டுவரப்பட்டுள்ள புதிய முன்மொழிவுகளுக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான சட்டக் கழகமான லோ ஆசியா தனது கடுமையான உத்தியோகபூர்வ கண்டனத்தையும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் கொமன்வெல்த் சட்டத்தரணிகள் சங்கம் ஆகியன இந்தத் திருத்தங்களுக்கு எதிராக முன்னெடுத்து வரும் உத்தியோகபூர்வப் போராட்டங்களுக்கு லோ ஆசியா அமைப்பு தற்பொழுது தனது முழுமையான சர்வதேச ஆதரவைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இது குறித்து லோஆசியா அமைப்பின் தலைவர் டி. எல். யாப் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ விசேட அறிக்கையில்,

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இந்தத் தன்னிச்சையான நகர்வுகள், நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் அதன் மீது பொதுமக்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை முற்றாகச் சீர்குலைக்கும் ஒரு பகிரங்கமான அரசியல் தலையீடாகவே பார்க்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் அரசியலமைப்பில் சிரேஸ்ட்ட நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயது தெளிவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பின்னணியில், முறையான பொது விவாதங்களின்றி மேற்கொள்ளப்படும் இத்தகைய தற்காலிக அரசியலமைப்புத் திருத்தங்கள் ஜனநாயகத்தின் அடிப்படைத் தூண்களைப் பலவீனப்படுத்தும் என அவர் எச்சரித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்முனை அஷ்ரப் வைத்தியசாலைக்கு சுகாதார பணிப்பாளர் நாயகம் விஜயம்

## தேவைகள், குறைபாடுகள் குறித்து ஆராய்ந்தார்



அம்பாறை, ஜூன். 30

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ. எல். எம்.றிபாஸின் வேண்டுகோளுக்கிணங்க, வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளை நேரில் பார்வையிடும் நோக்கில், சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின் போது, நோயாளிகளின் வசதிகளை மேம்படுத்தும் வகையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டண விடுதி, தாதியர் நிர்வாக அலுவலகம் மற்றும் மேற்பார்வையாளர் அலுவலகம் ஆகியவற்றை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளையும் நேரில் பார்வையிட்ட அவர், நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சுகாதார சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடினார்.

பின்னர் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் வைத்தியசாலையின் தற்போதைய தேவைகள், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள், புதிய உட்கட்டமைப்பு வசதிகள், மருத்துவ உபகரணங்களின் மேம்பாடு மற்றும் பொதுமக்களுக்கு தரமான சுகாதார சேவைகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பான பல்வேறு விடயங்களை முன்வைத்தனர்.

அவற்றை கேட்டறிந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியதுடன், வைத்தியசாலையின் எதிர்கால முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ. எல்.பாறூக், திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். தாசிம், தர முகாமைத்துவ வைத்திய அதிகாரி டாக்டர் கே. எல். எம்.ரயிஸ், விசேட வைத்திய நிபுணர்கள், கணக்காளர் யூ.எல். ஜவாஹிர்,பிரதம தாதியர், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலையின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் 149 போக்குவரத்து குற்றங்கள் பதிவு!

## 32 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்



அம்பாறை, ஜூன். 30

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்று வரும் தொடர் போக்குவரத்து சட்ட அமுலாக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கடந்த ஜூன் 27 ஆம் திகதி மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரை விசேட போக்குவரத்து சோதனை மற்றும் சட்ட அமுலாக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வீதிவிபத்துகளை குறைத்தல், போக்குவரத்து சட்ட மீறல்களைத் தடுப்பது மற்றும் பொறுப்புணர்வுடன் சட்டத்தை மதிக்கும் சாரதிகளை உருவாக்குவது ஆகிய நோக்கங்களுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொத்துவில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில், அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உட்பட 49 பொலிஸ் அதிகாரிகள் இந்த விசேட நடவடிக்கையில் பங்கேற்றனர். நடவடிக்கைகள் முழுவதும் மூத்த பொலிஸ் அதிகாரிகளின் நேரடி கண்காணிப்பும் இடம்பெற்றது.

நடவடிக்கையின் பெறுபேறுகளாக அபாயகரமான முறையில் வாகனம் செலுத்தியமை தொடர்பாக 17 வழக்குகளும், போக்குவரத்து சட்டங்களை மீறியமை தொடர்பாக 4 வழக்குகளும், செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய 23 பேர் மீது வழக்குகளும், பாதுகாப்பு தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய 76 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைளும், 32 மோட்டார் சைக்கிள்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டன. மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் அமுல்படுத்தப்படும் போக்குவரத்து சட்டங்கள் இப்பிரதேசத்திலும் எந்தவித விதிவிலக்கும் இன்றி சமமாக அமுல்படுத்தப்படும் என்றும், சட்டத்தை மீறுபவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுமக்களுக்கு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# நாயை உதைத்து துன்புறுத்திய நபருக்கு பிணை

அம்பாறை, ஜூன். 30

கதிர்காம பாதயாத்திரை அடியார்களுடன் வீதியில் சென்ற நாயை உதைத்து துன்புறுத்திய சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபா சரீப்பிணையில் செல்ல கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.


கடந்த சனிக்கிழமை கதிர்காம பாதயாத்திரை அடியார்களுடன் வீதியில் சென்ற நாயை 21 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் உதைத்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகிய நிலையில் பல தரப்பினரின் கோரிக்கைக்கமைய மாலை கல்முனை தலைமையக பொலிஸார் சந்தேக நபரை கைது செய்திருந்தனர்.

இதன் போது நேற்று முன்தினம் மாலை கல்முனை நீதிவான் நீதிமன்றில் சந்தேக நபரை ஆஜர்படுத்தியபோது சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபா சரீப்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்கை மறுதவணைக்காக ஜூலை மாதம் 13 ஆந் திகதி வரை ஒத்தி வைத்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பிரதம பரிசோதகருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய 21 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த நாய் யாழில் இருந்து கதிர்காம பாதயாத்திரையில் ஈடுபட்டு வரும் குழுவினரோடு பயணித்து வரும் சுப்பிரமணியன் எனும் பெயருடைய நாய் ஆகும்.

# கல்முனை சாஹிரா கல்லூரியில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர் கௌரவிப்பு



அம்பாறை, ஜூன். 30

நடைபெற்று முடிந்த க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் (9ஏ, 8ஏ, 7ஏ) பெற்ற 45 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சபை செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் வைத்தியர் எம்.கே. சனூஸ் காரியப்பர், றிஸ்வான், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சபை உறுப்பினர் ஆசிரியர் இர்ஸாத் கான், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது வெளிவந்த க.பொ.த சாதாரண தர பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பெற்ற 45 மாணவர்கள், அவர்களின்பெற்றோர்களுடன்இணைந்து கௌரவிக்கப்பட்டனர். (அ)

# மனித உரிமை ஆணைக்குழுவிடம் முத்து நகர் விவசாயிகள் முறைப்பாடு



திருமலை, ஜூன். 30

திருகோணமலை முத்து நகர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் சீனக்குடா பொலிஸாரின் அத்துமீறிய சம்பவம் தொடர்பிலும் கொழும்பில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக முறைப்பாடு அளித்துள்ளனர்.

முத்து நகர் ஒன்றிணைந்த விவசாய சங்கத்தின் செயலாளர் சஹீலா சபூர்தீன் கூறுகையில்-

முத்து நகர் விவசாயிகளின் காணிகள் சூரிய மின் சக்தி உற்பத்திக்காக கையகப்படுத்தப்பட்டதை அடுத்து விவசாயிகள் தொடர் போராட்டத்தை நடத்தி வந்தனர். இது தொடர்பில் மாற்றுக்காணி வழங்குவதாக கூறினர். ஆனால் தீர்வு தராமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே பிரதமர் ஊடாக தீர்வு வழங்கப்படவில்லை. எங்களது விவசாய நிலம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கையகப்படுத்தி 342 விவசாய குடும்பங்களை வீதிக்கு இறங்கியுள்ளனர். தற்போது அவர்கள் தொழில் இன்றி பாரிய பொருளாதார சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும் இரவு நேரத்தில் சீனக்குடா பொலிஸார் விவசாய குடும்பம் ஒன்றின் வீட்டினுள் நுழைந்து வீட்டை பரிசோதனை செய்துள்ளனர். இது அடிப்படை உரிமை மீறலாகும். இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு அறிந்துள்ளோம் -என்றார். (அ)

# மாணவர் தலைமைத்துவ வதிவிட முகாம்: சட்டம், ஒழுக்கம் குறித்து விளக்கமளிப்பு

அம்பாறை, ஜூன். 30

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் மாணவர்களின் தலைமைத்துவ ஆளுமைகளை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட "மாணவர் தலைமைத்துவ வதிவிட முகாம் கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு பாட சாலை வளாகத்தில் ஆரம்பமானது.

பாடசாலையின் ஒழுக்காற்று ஆசிரியர் மேஜர் எம்.எஸ்.எஸ். ஷிப்லியின் ஒருங்கிணைப்பில், பாடசாலை அதிபர் கே.எல்.ஏ. ஜௌபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.சி. இந்திக கலந்து கொண்டு இருநாள் வதிவிட முகாமை ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலையின் ஒழுக்காற்றுச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்முகாமில் சுமார் 100 மாணவர் தலைவர்கள் பங்கேற்றுள்ளதுடன், தலைமைத்துவம், ஒழுக்கம், குழு ஒருங்கிணைப்பு, பொறுப்புணர்வு, சமூகப் பண்புகள், முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

முகாமில் தேசிய மாணவர் படையணியின் 38ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் கே.எம். தமீம், சாய்ந்தமருது பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வீ. குகராஜ், முதலுதவி பயிற்றுவிப்பாளர் எம்.எஸ்.எப். நிஹாரா, உளவளத் துணை ஆலோசகர் மனுஷ் அபூ பக்கர் மற்றும் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் வளவா ளர்களாக கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பிரதான சூத்திரதாரியை...

மிலேச்சத்தனமான பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியையும் அதன் பின்னணியையும் கண்டறிவதற்காகவே தற்போதைய அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களை கைது செய்வதற்காக தற்போது நடைமுறையில் உள்ள இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அது ஒரு குற்றமா என கேள்வி எழுப்புகிறோம்.

அதேநேரம் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தையும், பொது அவசர கால நிலையினையும், நாட்டின் ஜனநாயகத்தை மீறுவதற்காக அரசாங்கம் ஒருபோதும் பயன்படுத்தாது.

அத்துடன் விரைவில் குறித்த சட்டங்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் -என்றார். (அ)

## பெற்றோலின் விலை...

அத்துடன் 407 ரூபாயாக காணப்பட்ட ஒட்டோ டீசல் 1 லீற்றரின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 382 ரூபாயாகும்.

ஏனைய எரிபொருள் வகைகளின் விலைகளில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை. (அ)

## இன்றுடன் முடிவடையும்...

சமர்ப்பிக்க தவறும் அரச உயர் அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

எனவே சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்கள் அனைத்தையும் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://ald.ciaboc.gov.lk/ என்ற இணையதளத்தின் ஊடாக சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குப் பிறகு சொத்துப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## யாழ்.மறைமாவட்டத்தின்...

நேற்று நியமிக்கப்பட்டார்.

1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 2000ஆம் ஆண்டு கொழும்பு மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பல இடங்களிலும் சமய, கல்வி மற்றும் நிர்வாகப் பணியாற்றியுள்ளதுடன் ரோமில் இறையியல் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் இளங்கலைப் பட்டத்தையும் கொழும்பில் கல்வியியல் டிப்ளோமாவையும் ஐக்கிய இராச்சியத்தில் கல்வியியலில் முதுகலைப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி, கலைமாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதி அப்போதைய திருத்தந்தை பிரான்சிஸால் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29ஆம் திகதி ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டதுடன் 2024ஆம் ஆண்டு ஒகஸ்ட் 19ஆம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராகவும் நியமனம் பெற்று பணியாற்றி வருகின்றார்.

தற்போதைய ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஓய்வு காரணமாக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக பணியாற்றி வந்த இவர் யாழ். மறைமாவட்ட ஆயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

## தேர்தல் செலவு...

நாடளாவிய ரீதியில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மாஅதிபரிடம் ஆணைக்குழு கோரியுள்ளது.

அத்துடன், அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களுடன் ஒருங்கிணைந்து, நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மாவட்ட தேர்தல் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகளை அடுத்த மாதத்திற்குள் பெற்றுக்கொள்ள ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சில வேட்பாளர்கள் மற்றும் கட்சிச் செயலாளர்கள் தங்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெற அல்லது பொது மன்னிப்பு வழங்கக் கோரியிருந்தனர்.

எனினும், கடந்த 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவற்றை மீளப்பெறும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இல்லை என்று அவர் மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளார்.

தேர்தல் முடிவடைந்த 21 நாள்களுக்குள், வேட்பாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தங்களின் பிரசாரச் செலவுகள் மற்றும் நிதி ஆதாரங்கள் தொடர்பான விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பது சட்டமாகும்.

இந்த சட்டத்தை மீறியதற்காகவே நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாட்டில் டெங்கு பரவல் தீவிரம்

# ஜூனில் மட்டும் 19,000 இற்கும் அதிகமானோருக்குத் தொற்று!

கொழும்பு, ஜூன். 30

நாட்டில் தற்போது நிலவி வரும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு நோய்த்தாக்கத்தின் பரவல் மேலும் தீவிரமடைந்துள்ளது. ஜூன் மாதத்தில் மாத்திரம் 19,000 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு நேற்று திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையின்படி, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று வரை நாடளாவிய ரீதியில் 53,159 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த ஆண்டின் 25ஆவது வாரம் நிறைவடையும் போது, நாட்டின் 124 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிஅபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களிலும் மாதமொன்றுக்கு பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 10,000 க்கும் குறைவாகவே காணப்பட்டது. எனினும், இந்த ஜூன் மாதத்தின் கடந்த 28 நாள்களில் மாத்திரம் 19,318 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மாகாண ரீதியில் அதிகளவிலான நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். அங்கு 27,833 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இது மொத்த நோயாளர்களின் எண்ணிக்கையில் 52.36 வீதமாகும்.

நிலவும் அபாயகரமான சூழ்நிலையைக் கட்டுப்படுத்த, கொசுக்கள் போகுமிடங்களை அழிப்பதற்கும், வீடுகளையும் சூழலையும் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர். (அ)

## தெல்லிப்பழை வைத்தியசாலை...

கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் சிறீகாந்த் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு கடந்த தேர்தல்களில் தமிழ் மக்களும் வாக்களித்திருந்தனர். அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நம்பியே தமிழ் மக்கள் இந்த ஆதரவை வழங்கியிருந்தனர்.

மாகாண சபையின் அதிகாரங்களை பலவீனப்படுத்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது என்பதே அவர்களின் பிரதான வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது.

ஆனால், தற்போது முன்னெடுக்கப்படுகின்ற விடயங்கள் நாசூக்கான முறையில் மாகாண சபை அதிகாரங்களைப் பலவீனப்படுத்தும் திட்டத்தோடு அரங்கேற்றப்படுகிறதோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

ஒரு வகையில் மக்களின் இந்த சந்தேகத்தில் உண்மையும் இருக்கின்றது.

கடந்த கால வரலாற்றை திரும்பிப் பார்த்தல், பல முயற்சிகள் மத்திய அரசினால் முன்னெடுக்கப்படும் சூழல் உருவான போதெல்லாம், அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா தனது அரசியல் சாணக்கியத்தால் அவற்றை தடுத்து நிறுத்தி, மாகாண அரசின் ஊடாகவே அத்திட்டங்களை முன்னெடுக்க வழிவகை செய்திருந்தார்

இன்று அவ்வாறானதொரு அரசியல் ஆளுமை தமிழ் தரப்பில் மத்தியில் இல்லாதுள்ளமையின் வெளிப்பாடே இந்நிலைமைக்குக் காரணம் - என்றார். (அ)

## வவுனியா மேயரின்...

படுகொலையை நிறுத்து", "மக்கள் ஆணைக்கு மதிப்பளி", "ஊழல் அறிக்கையை வெளிப்படுத்து" உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகள் ஏந்தப்பட்டதுடன், ஆளுநருக்கு எதிராக கோசங்களும் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம், முத்து முகமது, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

## 2026ஆம் ஆண்டில்...

ஆண்டில் 15.8 வீதம் வரை வீழ்ச்சியடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம், ஒருமுறை மாத்திரம் கிடைக்கப்பெற்ற வரி வருமான அதிகரிப்பைத் தொடர்ந்து, வருமான சேகரிப்பு சாதாரண நிலைக்குத் திரும்பியமையே இந்த வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம் என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் சூழ்நிலைகள், உலகளாவிய வர்த்தகம் மற்றும் எரிசக்தி சந்தையில் ஏற்படக்கூடிய தடங்கல்கள் காரணமாக, எதிர்காலத்தில் அரச வருமான இலக்குகளைத் தக்கவைத்துக் கொள்வது சவாலாக அமையலாம் எனவும் நிதி அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (அ)

## பல்கலை முறையில்...

உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வது, பல்கலைக்கழக முறைமையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வியின் தரம் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதன் ஊடாக, மாணவர்களின் கல்விச் சூழலை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர். (அ)

## நாவற்குழியில் இரவு...

வட்டிக்கு பணத்தைப் பெற்றவர்களுக்கும், கொடுத்தவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்ட நிலையில், நேற்று முன் தினம் இரவு அங்கு வந்த வன்முறைக் கும்பலால் பணத்தை பெற்றவரது வீடு மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## கிழக்கு விசேட...

இடைநிறுத்துமாறு கோரி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு "இலங்கை நீதிக்கான மையம் அமைப்பு மிக அவசரமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

சட்டவிரோத காணி ஆக்கிரமிப்பு மற்றும் கடலோர அத்துமீறல்களைத் தடுப்பதாகக் கூறி கொண்டுவரப்பட்டுள்ள இந்த விசேட பொறிமுறை, சிறுபான்மையினர் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தை மட்டும் குறிவைத்து எடுக்கப்பட்ட தன்னிச்சையான நடவடிக்கை என அந்த அமைப்பு சாட்டியுள்ளது.

காணி ஆக்கிரமிப்புகளும், அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களும் கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் உரியவை அல்ல் அவை தெற்கு, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் காணப்படும் தேசியப் பிரச்னைகளாகும்.

அவ்வாறிருக்கையில், கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் இத்தகைய விசேட குழுவை அமைப்பது மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அரசியலமைப்பின் 12(1) மற்றும் 12(2) உறுப்புரைகள் இன, மத, பிராந்திய பாகுபாடின்றி சமத்துவத்தை உறுதிப்படுத்துகின்றன. இந்த ஒருதலைப்பட்சமான மாகாண பொறிமுறையானது அரசியலமைப்புக்கு முற்றிலும் முரணானது எனவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரச காணிகள் (பொறுப்பேற்பு மீட்பு) சட்டம், அரச காணிகள் சட்டம், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் கடலோரப் பாதுகாப்புச் சட்டம் என ஏற்கனவே போதுமான சட்டக் கட்டமைப்புகள் உள்ள நிலையில், புதிய குழுக்கள் எதற்காக என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மகாவலி அதிகார சபை உள்ளிட்ட காணிகள் தொடர்பான பிரச்னைகளை தற்போதுள்ள சட்டங்களைக் கொண்டே பிரதேச செயலாளர்கள் மற்றும் பொலிஸார் ஊடாகத் தீர்க்க முடியும்.

தற்போது நாட்டுக்குத் தேவைப்படுவது புதிய குழுக்கள் அல்ல் இருக்கும் சட்டங்களை ஒன்பது மாகாணங்களுக்கும் பாரபட்சமின்றி, சமமாக அமுல்படுத்துவதற்கான உண்மையான "அரசியல் விருப்பமே" ஆகும் என இலங்கை நீதிக்கான மய்யம் வலியுறுத்தியுள்ளது.

எனவே, சர்ச்சைக்குரிய அமைச்சரவை தீர்மானத்தை உடனடியாக நிறுத்தி வைத்து, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய பொதுமக்கள் ஆலோசனைகளை நடத்தவும், சட்டத்தை நாடு முழுவதும் சமத்துவத்தின் அடிப்படையில் அமுல்படுத்தவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணை இறுதிக்கட்டத்தில்!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல



கொழும்பு, ஜூன். 30

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க நீண்ட காலம் சென்ற நிலையில் தற்போது அதன் இறுதி கட்டத்துக்கு வந்திருக்கிறோம். அதே போன்று போதைப்பொருள் கடத்தல்கார்களின் பிரதான சூத்திரதாரிகள் யார் என குறிப்பிட்டளவானவர்களை இனம் கண்டிருக்கிறோம் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

ஹோமாக பிரதேசத்தில் இடம்பெற்ற போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க நாங்கள் நீண்ட காலமாக முயற்சித்து வருகிறோம். இன்னும் முயற்சித்து விருகிறோம். தற்போது அதன் இறுதி கட்டத்துக்கு வந்திருக்கிறோம். அதேபோன்று போதைப்பொருள் கடத்தல்கார்களின் பிரதான சூத்திரதாரிகள் யார் என குறிப்பிட்டளவானவர்களை இனம் கண்டிருக்கிறோம். போதைப்பொருளுடன் நேரடியாக தொடர்புடைய வியாபாரிகளையே நாங்கள் ஆரம்பமாக இனம் கண்டோம். தற்போது உயிர்த்த ஞாயிறு பிரதான சூத்திரதாரியை போன்றே இந்த போதைப்பொருள் கட்டத்தல்களுக்கு பின்னால் இருந்த பிரதான சூத்திரதாரிகளை எங்களுக்கு கைது செய்ய முடியுமாகி இருந்தது. இவர்கள் மனிதர்கள் கொலை செய்யவும் பணம் எடுக்கிறார்கள். மனிதர்களை பாதுகாக்கவும் பணம் எடுக்கிறார்கள். மக்களிடமிருந்து சம்பளமும் பெறுகிறார்கள். இந்த மூன்று விடயங்களும் கடந்த காலங்கில் இடம்பெற்றிருப்பது, அண்மையில் இடம்பெற்ற கைதுகளின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

வரலாற்றில் எந்த அரசாங்க காலத்திலும் மேற்கொள்ளாத வகையில், தற்போதைய அரசாங்கம் அனைத்தையும் சட்ட ரீதியில் மேற்கொண்டுவருவதால், இந்த போதைப்பொருள் கடத்தல்கள் வியாபாரிகளுக்கு பின்னால் இருந்து செயற்படுபவர்களை கைது செய்ய முடியுமாகி இருக்கிறது.கடந்த காலங்களில் போல் அல்லாமல் சட்டம் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் தற்போது ஆரம்பித்திருக்கிறது. அதனால் தற்போது பழைய அரசியல் அதிகாரிகள் திடுக்கிட்டுள்ளனர்.அவர்கள் மக்களுக்கு எதிராக செய்த நடவடிக்கைகள் அனைத்தும் வெளிச்சத்துக்கு வருகின்றன. மக்களின் பணத்தை கொல்லையடித்து வாழ்ந்துவந்த அவர்களின் மறைவான வாழ்க்கையை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு முடியுமாகி இருக்கிறது.

அதேபோன்று இதற்கு முன்னர் ஒருபோதும் இடம்பெறாத வகையில், பொலிஸ் திணைக்களம், குற்றப்புலனாய்வு பிரிவு வெளிநாடுகளில் மறைந்திருக்கும் போதைப்பொருள் வியாபாரிகள், திட்டமிடல் குற்றவாளிகளை சிவப்பு மற்றும் நீல பிடியாணை அடிப்படையில் அவர்களை கைதுசெய்து, நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளன, தற்போது அந்த வலையமைப்பும் பதற்றமடைந்துள்ளது. அதனால் மக்கள் தற்போது நிம்மதியாக வாழமுடியுமான சூழல் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதுதான் நாங்கள் அடைந்து கொள்ள வேண்டியிருந்த வெற்றியாகும். மக்களின் உதவி இல்லாமல் இதனை எங்களால் செய்திருக்க முடியாது - என்றார். (அ)

# நாகப்பட்டினம் துறைமுகத்தில் வரியற்ற வர்த்தக நிலையங்கள்!

## இலங்கை - இந்திய கடல்வழி பயணிகள் சேவையை மேம்படுத்துதற்காக திட்டம்

சென்னை, ஜூன். 30

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான கடல்வழிப் பயணிகள் சேவையை மேம்படுத்தும் நோக்கில், நாகப்பட்டினம் சர்வதேச பயணிகள் முனையத்தில் வரியில்லா விற்பனை நிலையங்களை அறிமுகப்படுத்த தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

சர்வதேச விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களுக்கு இணையான தரமான வசதிகளை நாகப்பட்டினம் முனையத்திலும் வழங்குவதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

பயணிகள் போக்குவரத்து அதிகரித்து வரும் சூழலில், பயணிகளின் வசதியை மேம்படுத்தவும், வர்த்தக மற்றும் சுற்றுலா உறவுகளை வலுப்படுத்தவும் இது உதவும் என தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையிலான இந்த படகு சேவை, சுற்றுலாப் பயணிகள், யாத்ரீகர்கள், வர்த்தகர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு ஒரு முக்கிய இணைப்பாக மாறியுள்ளது.

தற்போது வரை 25,000 இற்கும் அதிகமான பயணிகள் இந்த வழித்தடத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

வரியில்லா விற்பனை நிலையங்களை அமைக்கும் பணிகளை ஒரு தனியார் நிறுவனம் மேற்கொள்ளும். இந்த நிலையங்களை அமைப்பதற்கான அடிப்படைப் பணிகள் ஜூலை மாதம் தொடங்கப்படவுள்ளது.

அடுத்த ஆறு மாதங்களுக்குள் இந்த விற்பனை நிலையங்கள் முழுமையாகச் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முனையத்தின் வணிக மதிப்பை அதிகரிக்க, வரியில்லா விற்பனை நிலையங்களுடன் இணைந்து அந்நியச் செலாவணி மாற்றும் மையங்களை உருவாக்குவதற்கான விலைமனுக்களும் கோரப்பட்டுள்ளன.

இந்திய அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, தகுதியுள்ள சர்வதேசப் பயணிகள் இந்த விற்பனை நிலையங்களில் வரிவிலக்குடன் கூடிய பொருட்களை வாங்கிக் கொள்ள முடியும் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# எங்களுக்கு தீர்வு இல்லையேல் ஆளுநர் செயலகம் முற்றுகை!

## கேப்பாபிலவு மக்கள் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஜூன். 30

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி காணிகளுக்குரிய மக்கள் ஆறாவது நாளாக நேற்றும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக கேப்பாப்புலவில் 55 குடும்பங்களுக்குரிய 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக்காணிகளும், 4குடும்பங்களுக்குரிய 100ஏக்கர் மத்தியவகுப்புக் காணிகளும், 3 குடும்பங்களுக்குரிய 11.5 ஏக்கர் தோட்டக்காணிகளுமாக 171 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மக்கள் பூர்வீக வாழ்விடமாக கொண்ட 55.5 ஏக்கர் காணியை முதற்கட்டமாக உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தே மக்கள் தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கேப்பாபிலவு மக்கள் -



எங்களுடைய வாழ்க்கை, வாழ்க்கையே போராட்டம், போராட்டமே வாழ்க்கை என்ற நிலைக்கு உள்ளாகியிருக்கின்றோம். இனியும் இந்த போராட்டத்தை நீண்ட நாள்களாக வீதியில் இருந்தோ அல்லது மகஜர் வழியாகவோ மேற்கொள்ளாது மிக குறிகிய காலத்திலே எங்களுடைய போராட்டத்தை நிறைவு செய்ய தீர்மானித்துள்ளோம்.

ஆளுநரிடம் நாங்கள் விடுத்த கோரிக்கை, இராணுவத்தினால் எங்களிடம் முன்வைக்கப்பட்ட அநீதியான கோரிக்கைகளுக்கு தீர்ப்பு வழங்கி எங்களுடைய காணிகளை பெற்றுத்தர வேண்டும் என்பதே. அல்லது உடனடியாக சாதகமான பதில் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தோம் இதுவரையும் முடிவில்லை.

ஆளுநர் இங்கு வரவில்லை அல்லது சாதகமான முடிவு தரவில்லை என்றால் நாங்கள் ஆளுநர் செயலகம் சென்று செயலகத்திற்கு முன்பாக எழுச்சிப் பேரணியை மேற்கொள்வதாக தீர்மானித்துள்ளோம். இதற்கிடையில் எங்களுக்கு சாதகமான பதிலை தரவேண்டும் - என்றனர். (அ)

# சிறுவருக்கு பீடி,சிகரெட் விற்ற 13 கடைகள் மீது நடவடிக்கை!

## கிளிநொச்சி பொலிஸார் அதிரடி

கொழும்பு, ஜூன். 30

கிளிநொச்சி நகரப் பகுதிகளில், 21 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு சட்ட விரோதமாக புகைப்பொருள்களை விற்பனை செய்த

13 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறுவர்களை இலக்கு வைத்து சிகரெட் மற்றும் பீடி உள்ளிட்ட புகைப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கிளிநொச்சி பொலிஸார் மறைமுக நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அதன்படி, சிறுவன் ஒருவரிடம் பணம் வழங்கி, வர்த்தக நிலையங்களில் இருந்து புகைப்பொருள்களை வாங்குமாறு பொலிஸார் ஏற்பாடு செய்தனர். சிறுவனுக்கு புகைப்பொருள்கள் விற்பனை செய்யப்பட்ட தருணத்தில், அங்கு கண்காணிப்பில் இருந்த பொலிஸாரிடம் வர்த்தகர்கள் சிக்கினர்.

இதனைத் தொடர்ந்து நகரின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக சோதனைகளில், சிறுவர்களுக்கு புகைப்பொருள்களை விற்பனை செய்த 13 வர்த்தக நிலையங்கள் அடையாளம் காணப்பட்டன.

சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்கும், அந்த வர்த்தக நிலையங்களுக்கும் எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு தொடருவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org